# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106
தொலைபேசி எண்: 2363 5010, 2363 5011 நிகரி: 2363 8282, 2363 8283
மின்னஞ்சல் - tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in


## செய்தி வெளியீடு

செய்தி வெளியீடு : 20 / 2016 நாள்: 03.10.2016

### தேர்தல் பார்வையாளர்கள் நியமனம்

தமிழகத்தில் ஊரகம் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல்கள் இரு கட்டங்களாக 17.10.2016 மற்றும் 19.10.2016 ஆகிய தேதிகளில் நடைபெறவுள்ளன. இத்தேர்தல்கள் அமைதியாகவும், நேர்மையாகவும் நடைபெறுவதைக் கண்காணிக்கவும், தேர்தல் விதிமீறல்களைக் கண்டறியவும், அவற்றின்மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கவும் மேலும், தேர்தல் பணிகள் மற்றும் வாக்கு எண்ணிக்கைப் பணிகள் முறையாக நடைபெறுவதைக் கண்காணிக்கவும் 27 இந்திய ஆட்சிப்பணி அலுவலர்களையும், 8 மாவட்ட வருவாய் அலுவலர்களையும் தேர்தல் பொதுப் பார்வையாளர்களாக நியமித்து தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் உத்திரவிட்டுள்ளது. இப்பொதுப்பார்வையாளர்கள் அனைவரும் 04.10.2016-க்குள் அவரவருக்கு ஒதுக்கப்பட்டுள்ள மாவட்டங்களுக்கு உடனடியாகச் சென்று தேர்தல் பணிகளை மேற்கொள்ள மாநில தேர்தல் ஆணையம் கேட்டுக்கொண்டுள்ளது.

(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி).

03/10/16

மக்கள் தொடர்பு அலுவலர்